


இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 116 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 20 – சனிக்கிழமை 06 டிசம்பர் 2025 – மதுரை 16 + 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 116: Thiruvalluvar Year - 2056 - Karthigai 20 - Saturday 06 December 2025 - Madurai 16+16 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்க்க கழக அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது!

# மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம்!

## காஞ்சிபுரத்தில் கண்ணாடி தொழிற்சாலையைத் திறந்துவைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**காஞ்சிபுரம், டிச.6-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று, (5.12.2025) காஞ்சிபுரம் மாவட்டம், பிள்ளைப்பாக்கம், சிப்காட் தொழிற் பூங்காவில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் (Bharat Innovative Glass Technologies Private Limited BIG TECH) நிறுவனம், ரூ.1003 கோடி முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணுச் சாதனங்களுக்கான உலகத் தரம் வாய்ந்த முன்-கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்கி வைத்து, உரையாற்றுகையில், “தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகளை ஈர்க்க கழக அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது” என்றும் “மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம்!” என்றும் குறிப்பிட்டார்.**

இந்நிகழ்ச்சியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

உலகத்தரம் வாய்ந்த அமெரிக்காவைச் சேர்ந்த கார்னிங் நிறுவனத்தின் தொழில் திட்டத்தை, நம்முடைய தமிழ் மண்ணில் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்!

கொரில்லா கிளாஸை தயாரிக்கும் இந்த நிறுவனம், ‘ஃபார்ச்சூன்500’ நிறுவனங்களில் ஒன்று! இப்படிப்பட்ட Leading கம்பெனி, நம்முடைய தமிழ்நாட்டில் முதலீடு செய்து, நம்முடைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவது உள்ளபடியே பெருமைக்குரிய ஒரு நிகழ்வாக அமைந்திருக்கிறது! அதுவும், ஆயிரத்து மூன்று கோடி ரூபாய் முதலீட்டில் 840 பேருக்கு வேலைவாய்ப்பை தரப் போகிறார்கள்! இப்போது இன்னும் அதிகம் முதலீடு வருவதற்கு உறுதி கொடுத்திருக்கிறார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.12.2025) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழிற் பூங்காவில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த கார்னிங் இண்டர்நேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஆப்டிமஸ் இன்ஃப்ராகாம் லிமிடெட் நிறுவனங்களின் கூட்டு நிறுவனமான பாரத் இன்னோவேட்டிவ் க்ளாஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் (Bharat Innovative Glass Technologies Private Limited – BIG TECH) நிறுவனம், 1003 கோடி ரூபாய் முதலீட்டில் 840 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் நிறுவியுள்ள மின்னணு சாதனங்களுக்கான உலகத்தரம் வாய்ந்த முன் – கவர் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பாரத் இன்னோவேட்டிவ் கிளாஸ் டெக்னாலஜீஸ் - கார்னிங் மற்றும் ஆப்டிமஸ் கூட்டு நிறுவனத்தின் இந்தத் திட்டம், இன்னும் வளர்ந்து, இன்னும் முதலீடுகளைக் கொண்டு வர வேண்டும். இன்னும் அதிகமான பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!

**உயர்தர வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை குறிக்கோளாகக் கொள்வீர்!**

கார்னிங் நிறுவனத்தின் அதிகாரிகளிடம் நான் கேட்டுக்கொள்வது; உலகத்தரம், அதிநவீன தொழில்நுட்பம், உயர் மதிப்பு ஆகியவற்றை உங்களின் குறிக்கோளாக நீங்கள் வைத்திருக்கிறீர்கள். அத்துடன் எங்கள் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருவதையும், உங்களின் குறிக்கோளாக நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சேர்த்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசு எந்தளவுக்கு வேகமாகச் செயல்பட்டு, முதலீடுகளைக் கொண்டு வருகிறது என்பதற்கு, ஒரு சாட்சியாக இந்த நிறுவனமே விளங்கிக் கொண்டிருக்கிறது!

கடந்த ஆண்டு ஜனவரியில், இந்தத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமிட்டோம்! ஜூன் மாதம் அடிக்கல் நாட்டினோம்! அடுத்த பதினேழு மாதங்களில் இன்றைக்கு இந்த நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறது!

> **“ஆயிரத்திற்கும் அதிகமான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு அதில், 80 சதவிகிதம் திட்டங்களை பல்வேறு நிலைகளில் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறோம்! இந்த வேகமும், வெளிப்படைத் தன்மையும் தான், உலக நிறுவனங்களுக்கு நாங்கள் சொல்லும் மெசேஜ் ஆக அமைந்திருக்கிறது!”**

வளர வேண்டும் என்று விருப்பம் இருந்தால் மட்டும் வளர்ச்சியை அடைய முடியாது! அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும்! அந்த உழைப்பு தான், திராவிட மாடல்!

அதனால்தான், ஆயிரத்திற்கும் அதிகமான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு அதில், 80 சதவிகிதம் திட்டங்களை பல்வேறு நிலைகளில் செயல்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறோம்! இந்த வேகமும், வெளிப்படைத் தன்மையும் தான், உலக நிறுவனங்களுக்கு நாங்கள் சொல்லும் மெசேஜ்ஆக அமைந்திருக்கிறது!

பல உலக நிறுவனங்களுக்கு இந்த ட்ரஸ்ட் இருப்பதால்தான், கடந்த நான்கு ஆண்டுகளில் எலக்ட்ரானிக்ஸ், G.C.C., R&D போன்ற துறைகளில் மகத்தான வளர்ச்சியைச் சாதித்திருக்கிறோம்!

**தமிழ்நாடுதான், எலெக்ட்ரானிக்ஸ் துறையின் தலைநகரம்!**

எலக்ட்ரானிக்ஸ் துறையில், 14.65 பில்லியன் டாலர் பொருட்கள் ஏற்றுமதியுடன் இந்தியாவிலேயே நம்பர்1ஆக இருக்கிறோம்! ஒட்டுமொத்த இந்தியாவின் எலக்ட்ரானிக்ஸ் எக்ஸ்போர்ட்டில் நம்முடைய பங்கு 41 சதவிகிதம்! கடந்த நான்கு ஆண்டுகளில், இந்தத் துறையில் 9 மடங்கு வளர்ச்சியை அடைந்திருக்கிறோம்! இது ஜஸ்ட் டேட்டா இல்லை; தமிழ்நாடுதான், Electronics Capital என்று அழுத்தமாகச் சொல்லும் Fact இது!

இதை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்ல, 440 கோடி ரூபாய் முதலீட்டில், ஒன்றிய அரசுடன் சேர்ந்து இந்த பிள்ளைப்பாக்கம் ‘சிப்காட்’டில், ‘மின்னணு தயாரிப்புத் தொகுப்பு’ மேற்கொள்ளப்பட இருக்கிறது! இதில், சூரிய ஒளி சார்ந்த ‘கதிரியக்கச் சோதனை மையம்‘ மின்சாதனங்கள் சோதனை மையம் - மின்னணுச் சான்றிதழ் ஆய்வகம் - PCB வடிவமைப்பு / விரைவான மாதிரி தயாரிப்பு மையம் - திறன் மேம்பாட்டு மையம் - தொழிலாளர் வீட்டுவசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்!

**மின்னணு உதிரிப் பாகங்கள் உற்பத்தித் திட்டம்!**

உலக அளவில் எலக்ட்ரானிக்ஸ் கருவிகள் உற்பத்தியின் முக்கிய மையமாக நாம் இருக்க வேண்டும் என்று “மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி” திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்! Designing முதல் - Production வரைக்கும் முழு மதிப்புச் சங்கிலியையும் தமிழ்நாட்டில் கொண்டு வருவது போன்று இந்தத் திட்டம் இருக்கிறது!

ஒன்றிய அரசு இப்படியொரு திட்டத்தை அறிவித்ததுமே, நம்முடைய திராவிட மாடல் அரசுதான் முதன்முதலாக மாநிலத்திற்கான மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தித் திட்டத்தை அறிவித்தோம்! இதன் ரிசல்ட் என்னவென்று கேட்டால், இந்தத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 24 விண்ணப்பங்களில் 8 விண்ணப்பங்கள், அதாவது, மூன்றில் ஒரு பங்கும் - 40 சதவிகிதம் அளவிலான முதலீடுகளும், தமிழ்நாட்டில்தான் மேற்கொள்ளப்பட இருக்கிறது!

**தமிழ்நாடு செமிகண்டக்டர் மிஷன் – 2030**

அதுமட்டுமல்ல, செமிகண்டக்டர் உற்பத்தி மற்றும் வடிவமைப்பு ஆகிய துறைகளிலும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். அதற்காக, “தமிழ்நாடு செமிகண்டக்டர் மிஷன் 2030”ஐ அறிவித்திருக்கிறோம்.


**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**


## திருப்பரங்குன்றம் பிரச்சினை குறித்து விவாதிக்க தி.மு.க, - கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் முழக்கம்!

# தமிழ்நாட்டில் மதவாத சக்திகள் அமைதியை சீர்குலைக்க முயற்சி!

## நாடாளுமன்றத்தில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, டிச.6-**

**“திருப்பரங்குன்றம் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும்” என நாடாளுமன்றத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். திருப்பரங் குன்றம் குறித்து விவாதிக்க முதலில் சபாநாயகர் அனுமதி மறுத்தார். - திருப்பரங்குன்றத்தில் அமைதியை சீர்குலைக்க மதவாத சக்திகள் முயற்சிப்பதாக மக்களவையில் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டினார்.**

மக்களவையின் நேற்றைய அவை நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பே, திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்து விவாதிக்கக்கோரி, மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர். பாலு, ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்தார். தமிழ்நாட்டில் சுயநல



சக்திகளால் வகுப்புவாத மோதல் தூண்டப்பட்டுள்ளதாக டி.ஆர்.பாலு, குறிப்பிட்டார்.

இதேபோல், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதியும், திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்து விவாதிக்க நோட்டீஸ் வழங்கினார். மாநிலங்களவையிலும் திருச்சி சிவா ஒத்திவைப்பு நோட்டீஸ் கொடுத்தார். இந்த நிலையில், மக்களவை கூடியதும், திருப்பரங் குன்றம் குறித்து விவாதிக்க தி.மு.க. எம்.பி.,க்கள் வலியுறுத்தினர். விவாதம் நடத்த சபாநாயகர் அனுமதி மறுத்ததால் கண்டனம் தெரிவித்து தமிழ்நாடு எம்.பி.,க்கள் முழக்கமிட்டனர்.

பிற்பகல் 12 மணிக்கு பிறகு அவை மீண்டும் கூடியதும், திருப்பரங்குன்றம் பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது. அப்போது பேசிய டி.ஆர்.பாலு, திருப்பரங்குன்றத்தில் 1996 மற்றும் 2014 ஆம் ஆண்டில் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையில்தான் பாரம்பரிய இடத்திலேயே தீபம் ஏற்றப்படுவதாக கூறினார். ஆனால், தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சிலர் மத கலவரத்தை தூண்டுவதாக டி.ஆர்.பாலு குற்றம் சாட்டினார்.

திருப்பரங்குன்றத்தில் யார் தீபம் ஏற்றுவது என்பதுதான் பிரச்சினை திருப்பரங்குன்றத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கோயில் நிர்வாகத்தினர் தீபம் ஏற்றுவதா? அல்லது கோயில் நிர்வாகத்திற்கு சம்பந்தமில்லாதவர்கள் தீபம் ஏற்றுவதா?

சிலர் பிரச்சினையை ஏற்படுத்தும் நோக்கில் நீதிமன்றம் சென்றனர். நூற்றாண்டுகளாக தீபம் ஏற்றப்பட்ட இடத்தில் இந்த ஆண்டும் இந்து சமய அறநிலையத்துறை தீபம் ஏற்றியுள்ளது 1996, 2014ல் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையில் பாரம்பரியமானஇடத்தில் தீபம் ஏற்றப்பட்டுள்ளது குறிப்பிட்ட சிலர் மத கலவரத்தை தூண்டுகின்றனர் என டி.ஆர்.பாலு மேலும் குற்றம்சாட்டினார்.

## மதுரையை கலவர பூமியாக்க பா.ஜ.க. முயல்கிறது!

# நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை தகுதிநீக்கம் செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்!

## “மதுரைக்குத் தேவை வளர்ச்சியா? மதவெறி அரசியலா?” - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கேள்வி!

*சென்னை, டிச.6-*

கார்த்திகை தீபத்தை கலவர தீபமாக மாற்றிய சங்பரிவார் கும்பல் மீது சட்ட ரீதியான நடவடிக்கையும், தகுதியற்ற நீதிபதி மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை பாரிமுனையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டு, திருப்பரங் குன்றத்தில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் மதச்சார்பின்மைக்கு எதிராக செயல்படும் நீதிபதி சுவாமிநாதனை கண்டித்து முழக்கமிட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம், நீதிபதி சுவாமிநாதன் இதுவரை அளித்த பல்வேறு தீர்ப்புகள், நீதிமன்ற மாண்பை அவமதிக்கும் விதமாக அமைந்திருப்பதாக குற்றச்சாட்டினார்.

நீதிபதி சுவாமிநாதனின் தீர்ப்பு குறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் புகார் கடிதம் அளிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோல், சென்னை அசோக்நகர் தபால்நிலையம் அருகே நீதிபதி சுவாமிநாதனை தகுதி நீக்கம் செய்ய வலியுறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் தென் சென்னை மாவட்ட செயலாளர் சிவா தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், ஏராளமானோர் கலந்துகொண்டனர். தமிழ்நாடு அமைதியான மாநிலம், இந்தியாவிற்கு முன்மாதிரியான மாநிலத்தில் மதகலவரத்தை ஏற்படுத்த பாஜக, ஆர்எஸ்எஸ் முயற்சி செய்வதற்கு கடும் கண்டனம் தெரிவித்தனர். வடமாநிலங்களில் செய்வது போல வன்முறை அரசியல் செய்ய முயற்சிக் கிறார்கள், தென் மாநிலங்களில் பா.ஜ.க. கொள்கை எடுபடவில்லை என்று அவர்கள் முழக்கமிட்டனர்.